சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண். 6518 /அ4/2023 நாள். 25.08.2023.

பொருள் பள்ளிக் கல்வி – சென்னை மாவட்டம் அனைத்து வகை பள்ளிகள்- குழந்தைகள் பாதுகாப்பு - The Protection of Children from sexual offences (POCSO) Act, 2012 – பள்ளிகளில் குழந்தைகளின் பாதுகாப்பிற்கு குழு அமைக்க தெரிவிக்கப்பட்டது – குழு அமைக்கப்பட்டு செயல்படுவதை தலைமை ஆசிரியர் / முதல்வர்கள் உறுதி செய்தல் – தொடர்பாக.

பார்வை அரசாணை(1டி) எண். 83. பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள். 17.06.2021.

..................

மேற்கான் பொருள் சார்ந்து பார்வையில் காண் அரசாணையில் தெரிவித்துள்ளவாறு சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பினை The Protection of Children from sexual offences (POCSO) Act, 2012 – மூலம் குழு அமைத்து உறுதி செய்யுமாறு சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின் படி கடந்த ஆண்டு தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தற்போது அனைத்து வகை பள்ளிகளிலும் குழந்தைகளின் பாதுகாப்பு சார்ந்து பார்வையில் காண் அரசாணையில் தெரிவித்துள்ள அறிவுரைகளின் படி குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட குழு தொடர்ந்து செயல்பட்டு குழந்தைகளின் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்யுமாறும், மேலும் இது சார்பான புகார்கள் ஏதேனும் பெறப்பட்டிருப்பின் அது தொடர்பாக சார்ந்த பணியாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அதன் விவரத்தினையும் சேர்த்து அறிக்கையாக இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு (ceochn@nic.in) உடன் அனுப்புமாறும் அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள்/ முதல்வர்களுக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு- அரசாணை நகல்

25.8.23

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை-08

25/8/23

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் . சென்னை மாவட்டம்.
   (இடைநிலை, தனியார் பள்ளிகள், தொடக்க பள்ளிகள்).
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ முதல்வர்கள்
   சென்னை மாவட்டம்.

நகல்

1. பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03